செ.வெ.எண்: 53 நாள்:19.08.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் நல்லிணக்கநாள் உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அனைத்து அரசு அலுவலர்களும் எடுத்துக்கொண்டனர்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் அனைத்து அரசு அலுவலர்களும் நல்லிணக்கநாள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (19-8-2016) நடைபெற்றது.

இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நல்லிணக்கநாள் உறுதிமொழியான "நான் சாதி, இன, வட்டார, மத அல்லது மொழி பாகுபாடு எதுவுமின்றி இந்தியாவின் அனைத்து மக்களின் உணர்வுப்பூர்வ ஒற்றுமைக்கும், நல்லிணக்கத்திற்கும் பாடுபடுவேன் என்று உளமார உறுதிமொழி எடுத்துக்கொள்கிறேன். மேலும் எங்களுக்கிடையேயான அனைத்து வேறுபாடுகளையும் வன்முறையில்



ஈடுபடாமல் பேச்சுவார்த்தைகள் மூலமாகவும், அரசியலமைப்பு சட்ட வழிமுறைகளை பின்பற்றியும் தீர்த்துக் கொள்வேன் என்றும், இதனால் உறுதியளிக்கிறேன்" என வாசிக்க அனைத்து அரசு அலுவலர்களும் நல்லிணக்கநாள் உறுதிமொழியை எடுத்துக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) திருமதி.மீராபரமேஸ்வரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.சாந்தி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**